**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 22.01.14 | 1. | 44) தமிழகத்தில் நடத்து முடிந்து நாடாளுமன்ற தேர்தலில் 37 தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.க இமாலய வெற்றி பெற்றதற்கு தமிழக முதலமைச்சருக்கு இந்த மாமன்ற கூட்டத்தில் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் தமிழகத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தொடர்ந்து மக்கள் நல திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் அம்மா |

| | | | |
|---|---|---|---|
| | | | அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து கொள்கின்றோம். |
| | 2. | **1) 21.02.2014 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**<br><br>இம்மநாகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் முடிவடைந்த பின் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 பஞ்சாயத்துக்களான மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, ஆகிய பகுதிகளிலும் , ஏற்கனவே உள்ள மாநகர பகுதியில் உள்ள ஒவ்வொரு வரிவிதிப்பாளர் மற்றும் கட்டிட உரிமையாளர்கள், கல்வி நிறுவனங்கள் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் சிறிய பெரிய சில்லரை வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மாநகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் உபவிதிகள் பின்வருமாறு பட்டியலிட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**குடிநீர் விநியோக உப விதிகள்**<br><br>தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு எண்கள் 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 432(5) c, d, e, f, g, h, 441,ன்கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்<br><br>தூத்துக்குடி மாநகராட்சியில் புதியதாக வீட்டுக்குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இந்த விதிகளின்கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் அளவைக் கணக்கிடவும் குடிநீர் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர்க்குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்தத் துணைவிதிகளில் இடம் பெறுகின்றன.<br><br>1) குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் துணை விதிகள் சட்டம் 432 மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) இல் கண்டுள்ள கட்டண விகிதங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை மாநகராட்சியில் செலுத்தி ஆணை பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.<br><br>அ) குடிநீர் இணைப்பிற்காக சாலை பராமரிப்பு கட்டணத்தில் 15 சதவீதம் நூற்றுவீதக் கட்டணம் (Centage) மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும். | 45)அலுவலகக் குறிப்பு 1,2 மற்றும் 3<br>அனுமதிக்கப்பட்டது |

குறைந்த அளவு ஆய்வுக் கட்டணம் ரூ.750/– வசூலிக்கப்படும்.

ஆ) குடிநீர்த் திட்டத்தில் அரசுக் கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக மாநகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு ஆணை பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகையைத் தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் வேறு இனஙகளுக்கு வரவு வைக்கப்படமாட்டாது.அத்துடன் செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

ஈ) குழாய் இணைப்பு வழங்கப்படுவதற்காக உடைக்கப்படும் சாலையை, குடிநீர் இணைப்புப் பெறுபவர்கள் தாங்கள் சொந்தச் செலவில் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு முன் மாநகராட்சிப் பொறியாளர்களின் அறிவுரைப்படி உரிய முறையில் செப்பனிட்ட பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

உ) குழாய் இணைப்புப் பணிகளுக்கு தேவையான பொருட்கள் இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக் குறிப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

ஊ) குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்தச் செலவில் மாநகராட்சி பகிர்மானக்குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

2) குடியிருப்பு பயன்பாட்டிற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் குழாய் அளவு விகிதத்தில் (Tap rate) உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்புத் துண்டிக்கப்படும்.

3) வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரணங்களுக்கானதா அல்லது குடும்பக் காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள 1994ம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் 432வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரையின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

4) அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடியிருப்பு பயன்பாட்டிற்கும் அவையல்லாத பிற பயன்பாட்டிற்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடியிருப்புக்கு அல்லது பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும். சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டிய இனங்களுக்கு மாமன்ற அனுமதியுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

ஆ) மாநகராட்சி மன்றத்தின் உரிமையான நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான பயன்பாட்டை பொறுத்து குடியிருப்பு அல்லது அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில்

கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டும்போதும், கூடுதல் கட்டிடம் கட்டும்போதும், பெரிய பழுதுகள் பார்க்கும்போதும், மாநகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது பயன்படுத்துவதாக ஆணையர் மற்றும் மாநகர பொறியாளர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத பயன்பாடாக கருதப்பட்டு வணிகக் காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஈ) கண்காணிப்புப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறுகளுடன் மாநகராட்சி மாமன்றம் தமது மாநகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

உ) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தும் 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் பிரிவு 200 (1ல்) குறிப்பிட்டுள்ளபடி, மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டிடங்களில் ஆண்டு மதிப்பு ரூ.120/–க்கு குறைவாக உள்ளவைகளுக்கும் மற்றும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட கட்டிடங்களுக்கும் "வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு'' (Taxation and Finance Committee)வின் ஒப்புதலுடன் குடிநீர் இணைப்பு வழங்கலாம்.

5) ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர்க்குழாய் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பைக் கட்டுப்படுத்த திருகு குழாய் (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் பயன் இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்பட மாட்டாது.

விளக்கம் – இத்துணை விதிகளில் இடம் பெறும் குடியிருப்பு (வீடு) என்பது ஒரு பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைய சொத்துவரிக்காக ஒரே பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் குறிக்கும்.

அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும்பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்துக் குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும். அடுக்கு மாடிக்குடியிருப்பில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

6) கோவில்கள், மசூதிகள், மாதாகோவில்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் வணிக நோக்கத்திற்கு வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூல் செய்யப்படும்.

7) இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர்க் குழாய்களில் உள்ள நீர்விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளின் அளவு அவற்றில் பொருந்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர

இனங்களையும் குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அனுமதி பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்குத் தக்கவாறு கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1) 15 மி.மீ. குழாய் இணைப்பு 10 மி.மீ. திருகு குறுங்குழாய்
2) 20 மி.மீ. குழாய் இணைப்பு 15மி.மீ. திருகு குறுங்குழாய்

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்து மேற்பார்வை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும் எல்லா இணைப்புகளும் திருகு குறுங்குழாய் (Flow Control Valve) மற்றும் இதர துணைப்பாகங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது மேற்பார்வைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15மி.மீக்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக்குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

7)அ) குடிநீர் இணைப்புகள் குறைந்தபட்சத் தேவை நேரங்களில் நிமிடத்திற்கு 7 லிட்டர்களுக்கு அதிகப்படாமல் இருக்கும் பொருட்டும், குடிநீர் ஒரே சீராக அனைவருக்கும் கிடைக்கும் பொருட்டும், புதிய மற்றும் ஏற்கனவே உள்ள இணைப்புகளுக்கு குடிநீர் வரத்தினைக் கட்டுப்படுத்தும் வால்வு (Flow Control Valve) பொருத்தப்படும். அதற்கான கட்டணத்தை மாநகராட்சி கருவூலத்தில் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் மாநகராட்சி ஆணையரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை மாநகராட்சிப் பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

9) அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளைச் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள், யாவையும் மாநகராட்சி அலுவலர் அல்லது அவரது அனுமதி பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளைப் பார்வையிட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிடத் தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாத காரணத்தால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர்க் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிதறும் தண்ணீர் மாநகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர்க் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

இ) குடிநீர் இணைப்புகளுக்கு உடைக்கப்படும் சாலையை குடிநீர் இணைப்பு

பெறும் பயனாளிகள் தங்கள் சொந்த செலவிலேயே சீரமைத்திட வேண்டும்.

10) அ) அளவுமானிகள் மாநகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் மாநகராட்சி மாமன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கிப் பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வசூலிக்கப்படும்.

இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை மாநகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்திரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்பந்தப்பட்ட அலகு அலுவலகத்தில் பொறுப்பு பொறியரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின் மட்டுமே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும். அளவுமானியை பழுதுபார்க்க பிரித்துக் கொடுக்கவும் பழுதுபார்த்த பின் திரும்ப பொருத்தவும் அதுவரை தற்காலிகமாக இணைப்பு வழங்கவும் கட்டணம் ரூ.25/– செலுத்த வேண்டும்.

ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது ஆணை விதியில் வரையறுத்துள்ள விகிதங்களின்படி குடிநீர்க்கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

11) குடிநீர் கட்டண வைப்புத்தொகை வசூலித்தல்.

அ) வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்று – ரூ. 10000/–

ஆ) வீட்டுப் பயன்பாடின்றி வணிக நோக்கு இணைப்பு ஒன்று – ரூ. 20000/–

இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்று – ரூ. 40000/–

ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத் தொகையை இருசம தவணைகளில் ஆறு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

12). குடிநீர்க் கட்டணம்

அ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 150/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் – ரூ. 15/–

ஆ) குடிநீர் வீட்டு பயன்பாடு இல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 300/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் – ரூ. 30/–

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 450/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் – ரூ. 45/–

மொத்தமாக குடிநீர் விநியோகிக (Bulk Supply of Water) கோரப்படும் இனங்களில் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

13) அ) அளவுமானி முறையிலான கட்டணத்தைக் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு திங்களும் 10ம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் மாநகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பைத் துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் குடிநீர்க் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் மாநகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணம் ரூ.208/–ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.208/–ம் ஆக மொத்தம் ரூ.416/–ம் வசூல் செய்யப்படும். இத்தொகை குடிநீர் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக மாநகராட்சியில் செலுத்த வேண்டும்.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தி மறு இணைப்பை பெற்றுக் கொள்ளத் தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

14) குடிநீர்பயன்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாகத் தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்புக் கட்டணம் ரூ.208/–ம் மறு இணைப்புக் கட்டணம் ரூ.208/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

**குறிப்பு:** இந்தத் துணை விதிகளில் வரும் காலாண்டு என்பது மூன்று முழுத் திங்கள் அல்லது 90
நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

15) அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ.250/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்து மூலம் அறிவிப்பு செய்து கொள்ள வேண்டும்.

ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின் தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

16) குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளில் ஆணையர் மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17) வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றுக் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்படும். மேலும் பிரிவு 22(அ)ல் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

18) குடிநீர்க் குழாய்களைத் தொட்டி அல்லது சேமிப்புத் தொட்டியுடன் நேரடியாக

இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

19) ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் மாநகராட்சியிலிருந்து குடிநீர்க் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும். பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று மாநகராட்சிப் பணியாளர்கள் முன்னிலையில் பழுது பார்க்க வேண்டும். மேலும், அதற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

20) குடிநீர் குழாயில் உள்ள நிலையை பரிசோதனை செய்யும் பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும் போது அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புக்களோ பழுதுபட்டு இருந்தால் இதைப் பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ ஆணையரால் குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போர்க்கு ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும் இணைப்புகளைச் சரி செய்யவில்லை என்று தெரியவருமேயானாலும் பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்புத் துண்டிப்பு செய்து விட்டு இணைப்பிற்கு குடிநீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

21) குடும்பப் பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக்குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லாது பிற காரணங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்பப் பயன்களுக்கான குடிநீரை அவையில்லாத பிறவற்றிக்குப் பயன்படுத்துவதாக ஆணையர் அறியவரின் அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணங்கள் இருந்தாலும் அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்பப் பயன்களுக்கு அல்லாத விகிதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னிடமுள்ள ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர், குடியிருப்போர் செலுத்தத் தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் ஆணை பிறப்பிக்கலாம்.

22) அ) மாநகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாயை அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படக் கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல்

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படும். பொருட்கள் யாதும் திருப்பி தரப்பட மாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்று உறுதிமொழியுடன் ரூ.7000/– அபராதத் தொகை பெற்றுக் கொண்ட பின்புதான் இணைப்பு வழங்கப்படும். மேலும், மேற்படி குடிநீர் இணைப்புக்குரிய குடிநீர் கட்டணத்தின் 3 வருடத் (ஆறு அரையாண்டுகள்) தீர்வையினைக் கூடுதல் தண்டத் தொகையாகச் செலுத்த வேண்டும்.<br><br>ஆ) இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகளை வைத்து குடிநீர் உறிஞ்சுவது கண்டுபிடிக்கப்பட்டால் நிரந்தரமாக குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். மேலும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.<br>23) குடிநீர் இணைப்பு வேண்டி மனு செய்யும் அனைத்து மனுதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருப்பதுடன் வெளிச் செல்லும் கழிவு நீரை வெளியேற்ற புதை வடிகால் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கும் நிலையில் மாநகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதை வடிகால் இணைப்புக்கும் மனு செய்ய வேண்டும். மேலும் மனு செய்யும் பகுதியில் புதை வடிகால் திட்டம் இல்லாதிருந்தால் பொதுக்கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் ஆகியவற்றில் இருந்து வரும் கழிவுநீரைத் தனியாக தொட்டி (Cess pool) ஆகியவற்றை மாநகராட்சி ஆணையர் திருப்தியடையும் நிலையில் அமைக்க வேண்டும். பொதுக் கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம், மலக்கழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக் கொடுக்க வேண்டுமானால், தனியாகத் தொட்டி ஒன்றை அதற்குரிய துணைக்கருவிகளுடன் பொருத்தி மாநகராட்சிப் பொறியாளர் முடிவுசெய்யுமிடத்தில் நிறுவப்படவேண்டும்.<br><br>24) கொதி கலன்களுக்கு மாநகராட்சியில் பகிர்மானக் குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்கான தனியான தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.<br><br>25) தீ விபத்து நேரிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் மாநகராட்சி ஆணையர்/பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாதவர்களால் பிரதானக்குழாய் அல்லது பகிர்மானக்குழாய் திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் ஆகியவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.<br><br>26) ஆணையர் அவர்கள் ஆணையின் பேரில் திருமணம் மற்றும் இதர நேர்வுகளில் ஒரு கட்டிடத்திற்குத் தற்காலிகமாக இணைப்பு வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100/– பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.208/–ம் அதை திரும்பத் துண்டிக்கும் போது ரூ.208/–ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15எம்.எம். அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 2 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு இணைப்பு கேட்டவர்களுக்கு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும். கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருள்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், சொந்தசெலவிலும் செய்து கொள்ள வேண்டும். கூடுதலாக | |

குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50/– வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

27) அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியின் மீது பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதன் மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவைப் பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ கூடாது.

ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானிக் கருவி பதிவு செய்வதற்கு முன்னாள் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தவிர்க்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையோ அனுமதிக்கப்பட மாட்டாது. அல்லது அதற்குக் காரணமாக இருத்தல் கூடாது.

28) அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் கொடுக்கப்பட்ட எல்லா குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும். அவ்வாறு உள்ள குடிநீர் இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் மாநகராட்சிக்குச் செலுத்தப்பட வேண்டிய எல்லாக் கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் அவ்விணைப்புகள் அதிகாரப்பூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகளை மாநகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாக கருதி குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

இ) புதிதாகக் குடிநீர் இணைப்புப் பெற விரும்புகின்றவர்கள் மாநகராட்சிக்கு நடப்பு நிதி ஆண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் நகல்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

29) குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர்ப்பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் குடும்ப பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தவறுதலாகப் பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகின்றது என்று தெரிய வந்தாலோ 24 மணி நேர கால எச்சரிக்கை அறிவிப்புக் கொடுத்து இணைப்பைத் துண்டிக்கும் உரிமை மாநகராட்சி ஆணையருக்கு உண்டு. இத்தகைய நேர்வுகளில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நஷ்டத்திற்கும் மாநகராட்சி மாமன்றமோ அல்லது ஆணையரோ பொறுப்பு அல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது.

30) ஒவ்வொரு இணைப்பின் தகுதியையொட்டி கண்காணிப்புப் பொறியாளர்,

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.<br><br>**31)** மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர்<br><br>அ) ரூ.500/– வரை அபராதமும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால் தொடர் அபராதமாக நாள் ஒன்றுக்கு ரூ.25/– வீதம் விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>**32)** குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை (படிவம்–அ) மாநகராட்சி தகவல் மையத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.<br><br>**பொதுக்குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்**<br><br>**1)** எவரும் பொதுக்குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படி விடக்கூடாது.<br><br>**2)** அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.<br><br>ஆ) குடும்பப் பயன்களுக்காக அன்றி பிற பயன்களுக்கு பொதுக் குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.<br><br>இ) பொதுக் குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ அல்லது துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ பிராணிகளைக் குளிப்பாட்டுவதோ கூடாது,<br><br>ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொதுக்குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.<br><br>**3)** விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பதற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காகப் பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.<br>**4)** தீ விபத்தின்போது தீயினை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொதுக் குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக்கூடாது. இவ்வாறு தீயணைப்புக்காக அன்றி பிற பயன்களுக்காக பொதுக் குடிநீர்க் குழாய் அல்லது தீயணைப்புக் குழாயில் இருந்து தன்னல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாகக் கருதப்படுவதுடன் மாநகராட்சியின் சட்ட விதிகளின்படியும் அவர் மீது நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | |

5) அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள எவரும் பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாயை பயன்படுத்துதல் கூடாது.

6) அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள மிருகங்களை அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்குத் தெரிந்திருக்கக்கூடிய, மிருகங்களை பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக்குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

7) பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் ஆகியவற்றைச் சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் மாநகராட்சிகளின் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

8) தீ விபத்து நேரும்போது அன்றி ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மானக்குழாயில் உள்ள தீயணைப்புக்குழாய் அல்லது மாநகராட்சி குடிநீர் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக்குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

9) பொதுக்குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக கிடைத்த குடங்கள் டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் வைக்கவோ கூடாது. பொதுக்குடிநீர் குழாயில் குடங்களைக் கழுவி குடிநீரை வீணாக்கக்கூடாது.

<u>**தண்டனை:**</u>

இந்த துணை விதிகளில் எந்த ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும் மேலும், ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும், அவர் தண்டனைக்கு உரியவர் என்று கருதப்படுவர். அவருக்கு ரூ.1000/– வரையிலும் தண்டமாக வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணைவிதிகளைத் தொடர்ந்து மீறப்படுமானால் நாள் ஒன்றுக்கு ரூ.100/– தொடர் தண்டல் விதிக்கப்படும்.

<u>படிவம் . அ</u>

<u>விண்ணப்ப படிவம்</u>

<u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

அனுப்புநர்

பெறுநர்

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி

வீட்டு உரிமைதாரர்/ குடியிருப்போர் ஆகிய நான் மேற்காணும் முகவரியில் புதிய வீடு / வணிகம் / தொழிற்சாலை குடிநீர் இணைப்பு வழஙக கேட்டு கொள்கிறேன்.

குடிநீர் வழஙகல் துணைவிதிகளின்படி என்னால் பயன்படுத்தப்படும் குடிநீருக்கான கட்டணஙகளை மாநகராட்சி தகவல் மையத்தில் தெரிவித்துள்ளவாறு செலுத்த ஒப்புக்கொள்கின்றேன்.

மேலும் குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளை பின்பற்றுவேன் என்று உறுதியளிக்கிறேன். ஏதேனும் நிகழ்வில் குடிநீர் இணைப்பினை நீக்கம் (Cancel) செய்வதாக இருந்தால் ஆணையர், பொறியாளர் அல்லது உரிய அலுவலர்களுக்கு ஒரு மாதம் முன்னதாக எழுத்து மூலம் தகவல் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கினே்றேன்.

இடம் : விண்ணப்பதாரர் கையொப்பம்

நாள் : (உரிமைதாரர் / குடியிருப்போர்

<u>அலுவலக குறிப்பு</u>

1. குடிநீர் இணைப்புகளுக்கான துணை விதிகளை ஒப்புதல் வழஙகலாம்.
2. துணைவிதிகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஒப்பம் பெற்று மாநில அரசிதழில் வெளியீடு செய்வதற்கும், அதற்கான லெவினஙகளை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.
3. அரசாணைப்படியும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை அவர்களின் ஒப்பந்தத்தின்படி கடன் தொகை திரும்ப செலுத்த வேண்டியுள்ளதால், குடிநீர் விநியோக உபவிதிகளில் அஙகீகரிக்கப்படும் வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புதாரர்கள் மற்றும் புதிய குடிநீர் இணைப்புதாரர்களிடம் பெற்று வழஙக மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

**2) 21.02.2014 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

**46)** அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 1, சஙகரப்பேரி புலிபாஞ்சான்குளம் சர்வே எண் 1/1A1A நம்பர் புஞ்சை ஏக்கர் 55ல் மத்தியில் கிழமேலாக உள்ள பாதைக்கான நிலம் ஏக்கர் 3 செண்டு 7.6 பொதுப்பாதை இடத்தினை பொதுமக்கள் அனைவரும் பொதுவாக புழஙகிக்கொள்ளும் வகைக்கு தூத்துக்குடி மாநகராட்சிக்கு தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய அனுமதி கோரி மனுதாரர் திரு. எம்.எஸ்.மூர்த்தி என்பவர்

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பித்துள்ளார்.<br><br>மனுதாரர் திரு. எம்.எஸ்.மூர்த்தி சங்கரப்பேரி புலிபாஞ்சான்குளம் சர்வே எண் 1/1A1A நம்பர் புஞ்சை ஏக்கர் 55ன் இடம் உரிமைக்கான பத்திர பதிவு எண் 1867/12 ஆவணத்தின் நகல் சமர்ப்பித்துள்ளார்.<br><br>மேற்படி இடத்தில் கிழமேலாக செல்லும் வடபகுதி 856மீ நீளம், தென்பகுதி 865மீ, நீளம் கிழக்கு கடைசியில் 22.2மீ அகலம், மேற்கு கடைசியில் அகலம் 18.2மீ உள்ள பொதுப்பாதையை தூத்துக்குடி மாமன்றத்தின் அனுமதியின்றி மனுதாரரால் தான பத்திரம் பதிவு எண் 115/2013ன்படி தமிழ்நாடு மேதகு ஆளுநர் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பொதுப்பாதைக்கு பட்டா எண் 55ன்படி புலிபாஞ்சான்குளம் புல எண் 1, உட்பிரிவு 18, பரப்பு 1 ஹெக். 57 ஏக்கர் என நில அளவை ஆவணம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.<br><br>உறுப்பினர் செயலர் (பொ) உள்ளூர் திட்டக்குழுமம் தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண் 619/2013 தூஉதிகு நாள் 19.07.2013ல் மேற்படி 55 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள 60' அடி அகல மாநகராட்சி மண்சாலை அணுகுசாலையாக அமைகிறது எனவும், வளர்ச்சி கட்டுப்பாட்டு வரையறைகள் 9(1)(a)ன்படி அணுகுசாலை, தார்சாலையாக அமையாததால் அணுகுசாலை தார்சாலையாக அமைக்கப்பட அறிவுறுத்தியதின் அடிப்படையில் தற்போது இடத்தில் பொதுப்பாதை தார்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இடத்தை நேராய்வு செய்ததில் மேற்படி இடத்தில் கட்டிடங்கள் இன்றி காலி மனையாக உள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் 32 மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.<br><br>தூத்துக்குடி வருவாய் வட்டாட்சியரின் செயல்முறை DTR/STRV2013–135 8A108/1422 நாள் 26.03.2013 உத்திரவின்படி மேற்படி 55 ஏக்கர் நிலத்தில் சர்வே எண் 1/13 முதல் 1/26 வரையிலான தனித்தனியாக சர்வே உட்பிரிவு செய்யப்பட்டு உட்பிரிவு சர்வே ஆவணங்களில் உரிய திருத்தம் செய்யப்பட்டு நில அளவை ஆவணம் பட்டா வழங்கப்பட்டுள்ளதாலும், பொதுப்பாதைக்கு சர்வே எண் 1/18 என தனித்த உட்பிரிவு வழங்கப்பட்டுள்ளதாலும் உறுப்பினர்/செயலர்(பொ) உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண் 619/2013 தூஉதிகு நாள் 19.07.2013ன்படி மேற்படி பொதுப்பாதையை மாநகராட்சி சாலை என ஏற்பு செய்துள்ளதாலும் மனுதாரரால் ஏற்கனவே தமிழ்நாடு மேதகு ஆளுநர் பெயரில் பொதுப்பாதை தான பத்திரம் பதிவு எண்115/2013 பத்திரப்பதிவை ரத்து செய்து, புலிபாஞ்சான்குளம் சர்வே எண் 1/18 பரப்பு 1 ஹெக். 57 ஏக்கர் பொதுப்பாதை இடத்தினை மனுதாரர் திரு. எம்.எஸ்.மூர்த்தி என்பவரிடமிருந்து மாநகராட்சி பராமரிப்பு செய்ய பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/626/14 | |
| | 3)2014–2015ம் ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும் உத்தேச செலவுத் தொகை ரூ.30.00 லட்சம் செலவாகும் இச்செலவினத்தை மாநகராட்சி 2014–2015ம் ஆண்டிற்குரிய பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 47)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு:</u><br>1)அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுதுபொருட்களை கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கவும் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/000878/2014 | |
| | **4)** தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தின் கடித எண். வ7/40313/12 நாள் 18.2.2014ம் தேதிய கடிதத்தில் தூத்துக்குடி மாவட்ட நலக்குழுவின் நலத்திட்ட உதவிகளை செயல்படுத்திட நிதி திரட்டுதல் பணிக்காக 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு மாநகராட்சியின் பங்குத்தொகையாக தலா ரூ 25000/– வீதம் மொத்தம் ரூ 50000/– செலுத்த தெரிவிக்கப் பட்டுள்ளது.<br>மேற்காண் விபரப்படியான பங்குத்தொகை ரூ 50000/–ஐ மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>குறிப்பு:</u> மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்தபடி அனுமதிக்கலாம் சி4/002015/2014 | 48)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்ட து |
| | 5) இம்மாநகராட்சி பொது சுகதாரப்பிரிவில் பழுதடைந்த உபயோகமற்ற 74 டிரைசைக்கிள்களை 21.2.2014ம் தேதி ஆணையர் அவர்களின் உத்திரவின்படி செயற் பொறியாளர் அவர்களின் தலைமையில் பொது ஏலம் நடத்தப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட 7 நபர்களில் உச்ச ஏலக்கேள்வியாக திரு. எ. முருகன் என்பவரால் ரூ 60300/–ற்குஏலம் கேட்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி உச்ச ஏலக் கேள்வியை அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். இ5/12443/2013 | 49)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்ட து. |
| | 6)இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் கார்பெண்டர் உதவியாளராக பணிபிரிந்து 31.07.2012ல் ஓய்வு பெற்ற திரு V. இசக்கி என்பவருக்கு அன்னாரது ஊதியத்தில் 01.04.1986 முதல் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை . 2960/– அதற்குரிய வட்டி தொகை ரூ 13870/– மற்றும் அரசு பங்கு தொகை ரூ 10000/– சேர்த்து மொத்தம் ரூ.26830/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**–மாமன்றம்அனுமதிக்கலாம். இ2/2023/2014 | 50) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்ட து. |
| 7) | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் நிரந்தர தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து 05.07.2012ல் பணியிடை காலமான திரு. பெ. முத்துபாண்டி என்பவருக்கு அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ 2960/– அதற்குரிய வட்டி தொகை ரூ 12126/– சேர்த்து மொத்தம் ரூ 15086/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாரின் மனைவி திருமதி. மு. பொன்னம்மாள் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 51)அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்ட து. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு**–மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/7173/2014 | |
| 8) | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்திறனற்ற பணியாளராக பணிபுரிந்து 15.07.2013ல் பணியிடை காலமான திரு.வே. சுப்பிரமணியன் என்பவருக்கு அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ 2960/– அதற்குரிய வட்டி தொகை ரூ 13011/– சேர்த்து மொத்தம் ரூ 15971/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாரின் மனைவி திருமதி சு. வள்ளியம்மாள் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**–மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/9449/2013 | 52) அலுவலகக்குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| 9) | இம்மாநகராட்சியில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2014ம் வருடத்திற்கு சீருடைப்படி வாங்குவதற்கு அரசாணை எண். 236 நாள் 01.06.2009ன் படி வழங்குவதற்கு தலா ரூ 750/– வீதம் பத்தொன்பது நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் இரண்டு மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு தொகையாக ரூ 15750/–ம் மேலும் நான்கு பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியாக தலா ரூ 1200/– வீதம் ரூ 4800/–ம் சேர்த்து மொத்தமாக ரூ 20550/–ம் வழங்கப்பட வேண்டும். தொகையை பணியாளர்களுக்கு வழங்கவும், மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம். எச்4/2987/14 | 53) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்ப.டது . |
| | 10)தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.8.2013ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு.எம். சூரியநாராயணன் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை அதற்குரிய வட்டி மற்றும் அரசு மான்யத்தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழங்கப்படவேண்டியது உள்ளது<br><br>1)சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை பிடித்தம் ரூ. 2960/–<br>2)அதற்குரிய வட்டி தொகை ரூ. 15337/–<br>3)நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு) எண் 340 நாள் 8.8.2008ன் படி சிறப்பு சேமநலநிதி மான்யத் தொகை ரூ. 10000/–<br>————————<br>ரூ. 28297/–<br>————————<br><br>மேற்கண்ட தொகை ரூ. 28297/–ஐ (ரூபாய் இருபத்தி எட்டாயிரத்து இருநூற்றி தொன்னுற்றி ஏழு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். சி2/ 4380/2013 | 54) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| 11) | தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.9.2013ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு. டி.சண்முகராமேஸ்வரன் | 55) அலுவலகக்குறிப்பு |

| | | |
|---|---|---|
| | என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகைக்குரிய வட்டி மற்றும் அரசு மான்யத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழங்கப்பட வேண்டியதுள்ளது.<br><br>1)சிறப்பு சேமநலநிதி சந்தா ரூ. 14863/–<br>தொகை ரூ 2960/–க்குரிய வட்டி தொகை<br><br>2)நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்<br>(ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு) எண்340<br>நாள் 8.8.2008ன் படி சிறப்பு சேமநலநிதி அரசு<br>மான்யத் தொகை ரூ.10000/–<br>––––––––––<br>ரூ. 24863/–<br>மேற்கண்ட ரூ 24863/– (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்–**அனுமதிக்கலாம் சி2/9800/2013 | படி அனுமதிக்கப்பட்டது. |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.3 ராஜகோபால் நகர் பகுதியில் குடிநீர் சரிவர கிடைக்காததால் ராஜகோபால் நகர் பகுதி 60000லிட்டர் கொள்ளளவு நீர்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் பதித்து பொதுகுழாய்கள் மூலம் மேற்படி ராஜகோபால் நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் சீரமைக்க குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 404714 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக் குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம். ம.ப.எண். 285/13–14 | 56) பதிவு செய்யப்பட்டது |
| | 13) வார்டு எண்.3 ராஜகோபால் நகர் வடபகுதி நிகிலேசன் நகர் பகுதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் கிடைக்காத காரணத்தால் மேற்படி பகுதி பொது மக்களுக்கு பொது குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ள குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 140000/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு–**மாமன்றம்பதிவுசெய்யலாம். ம.ப.எண். 305/13–14 | 57) பதிவு செய்யப்பட்டது |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சி, கால்டுவெல் காலனி பகுதியிலுள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து 49 மற்றும் 50வது வார்டு பகுதிக்கு குடிநீர் விநியோகம் மேற்கொண்டு பயன்பாட்டிலிருந்து வந்த 7.5.கு.வே. மின்மோட்டார் பழுதடைந்து விட்டதால் மேற்படி பம்பு செட்டை இயக்க முடியவில்லை எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி புதிய பம்பு செட் பொருத்தி குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 64,000 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | 58) பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக் குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம். **இ3/1346/14** | |
| | 15) | இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்க்கும் பொருட்டு வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ **20.00** இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ **20.00** இலட்சம் தற்போது வழங்கப்படும் குடிநீர் லாரி வாடகையை வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையினை மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக் குறிப்பு–**<br>வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ **20.00** இலட்சம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு **30.06.2014** தேதி வரைக்கும் ஆகும் கூடுதல் செலவினம் பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**இ3/187/14** | **59)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 16) | இம்மாநகராட்சி பகுதியில் வார்டு எண். **40, 41 12** பகுதி **21** பகுதி **24** பகுதி மற்றும் **26** பகுதி ஆகிய பகுதிகளில் குப்பை அள்ளும் பணி M/s Our Land Engineering works நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br>மாமன்ற தீர்மான எண். **17** நாள் **22.1.2014**ல் **18.4.2014**ல் முடிவடைந்துள்ளதால் புதிதாக குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி தற்போது கோரப்பட்டு கோப்பு பொறியர் பிரிவு மூலம் நடவடிக்கையில் உள்ளது. இச்சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தல் ஒட்டி ஒப்பந்தக்காரரை முடிவு செய்து வேலை உத்திரவு வழங்க **31.7.2014** வரை உள்ள அவகாசம் தேவைப்படும் நிலை உள்ளதாலும் மேற்படி பணி அத்தியாவசிய பணியாக இருப்பதாலும் **19.4.2014** முதல் **31.7.14** வரையிலான காலகட்டத்தில் மேற்படி வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ள தற்போது பணி மேற்கொண்டு வரும் அதே ஒப்பந்தாரர் M/s Our Land Engineering works தூத்துக்குடி நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் அதாவது குப்பை அள்ளும் பணிக்கு **1** டன் ஒன்றுக்கு ரூ **1047/–** வீதமும் வடிகால் மண் அகற்ற நடை ஒன்றுக்குரூ **517/–** வீதமும் மேற்படி பணி செய்யவும் அதற்கு ஆகும். கூடுதல் செலவு தொகைக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி **31.7.2014** முடிய பணி செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். .<br>**எச்1/18432/12** | **50)** அலுவலக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 17) | இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண் டி.என்**.69**எச். **5736** வாகனம் **26.09.2003**ல் வாங்கப்பட்டது. தற்போது தகுதி சான்று பணிகள் செய்வதற்கு செலவுத்தொகை ரூ **60000/–**ஆகிறது. அரசு அறிவித்த தொகை:ரு/**15000/–** போக கூடுதல் செலவீன தொகை ரூ.**45000/–** செய்ய வேண்டியுள்ளது. தற்போது தகுதி சான்று பணிகள் செய்ய வேண்டிய அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் கூடுதல் செலவீனம் செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**இ3/4331/14** | **61)** அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 18) | )தூத்துக்குடி மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் தெரு விளக்கு பராமரிப்பு பணி மூன்று ஆண்டுகள் செய்வதற்கு 10.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த விலை விகிதம் கொடுத்த வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளியை இம்மாமன்றம் தன்னுடைய தீர்மானம் எண்.55 நாள் 30.03.2012ல் அங்கீகரித்துள்ளது. அதன்படி முதலில் ஓராண்டு கால பராமரிப்புக்கு விடவும் அதன் பின்னர் 2 வருடங்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை அதனை தேவைப்படின் நீட்டித்து கொள்ளவும் இம்மாமன்றம் அனுமதித்து உள்ளது. தற்போது 03.04.2014 உடன் இரண்டு ஆண்டு காலம் முடிவடைவதால் மீண்டும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மற்றும் அதற்காகும் செலவுத்தொகை ரூ 3117197/–க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கு இடையில் PPP Model மூலம் Energy Saving Measures அமுலுக்கு வரும்போது நீட்டிப்பு காலம் ரத்து செய்யப்படும்.<br>**அலுவலகக்குறிப்பு–**மாமன்றம்அனுமதிக்கலாம். இ3/11609/11 | 62) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது. |
| | 19) | தூத்துக்குடி மாநகராட்சி, நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் 2006–2007ல் பிளம்பர் உரிமம் பெறுவதற்காக திரு ஆர். சண்முகம் என்பவர் 21.6.2006ல் தூத்துக்குடி நகராட்சி கரூவூலத்தில் வைப்புத்தொகையாக (ரசீது எண். 302013) ரூ 10000/–ஐ செலுத்தியுள்ளார்.<br>அரசாணை நிலை எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.7.07ன் படி திரு ஆர். சண்முகம் என்பவரின் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்பட்டது. அவர் தன்னுடைய 19–8–2013ம் தேதிய விண்ணப்பத்தின் மூலம் பிளம்பர் உரிமம் பெறுவதற்காக செலுத்திய வைப்புத்தொகையை திரும்ப வழங்குமாறு கேட்டு மனு செய்தததின் பேரில், மாநகர பொறியாளரின் ஒப்புதல் 27–9–13 அன்றும் ஆணையர் அவர்களின் அனுமதியை 4–10–2013ல் வழங்கியுள்ளார்கள்.<br>திரு. ஆர். சண்முகம் என்பவர் செலுத்திய வைப்புத்தொகையை (நாள் 21–6–2006 ரசீது எண்.302013) மூன்று ஆண்டுகளுக்குள் வாங்காததால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு (2006–2007 ப.எண். 46) ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு**மாமன்றம்அனுமதிக்கலாம். பி3/20367/12 | 63) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது. |
| | 20) | இம்மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் வரும் 600,500mm PSC தன்னோட்டக்குழாயில் வாகைக்குளம் மற்றும் புதுக்கோட்டை கலியாவூர் சாலை பைபாஸ் வால்வு ஆகிய இடங்களில் குடிநீர் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாவதை சரி செய்ய குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ 97,824/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 309/13–14 | 64) பதிவு செய்யப்பட்டது |
| | 21) | தூத்துக்குடி மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள நீர் வடிகட்டி கிணறுகள் ஆற்றின் திசை மாறியதன் காரணமாக அதனருகில் நீர்வரத்து இன்றி போதிய நீர் ஆதாரம் இல்லாமல் வழக்கமான குடிநீர் பம்பிங் செய்வது குறைந்து நகரின் குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து வந்ததை, பொக்லைன் எந்திரம் கொண்டு மேற்படி கிணறுகளை சுற்றிலும் தண்ணீர் செல்லும்படி போக்கு ஏற்படுத்தியும் சகதிகளையும் சுத்தம் செய்து | 65) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | குடிநீர் பம்பிங் அதிகரிக்கவும் மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 3,62,750/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 240ஏ/13–14 | |
| 22) | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ 282.44 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.6) அரசாணை எண் (4டி) எண். 3 நாள் 22.10.2012 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட அரசாணையின்படி குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட திட்டப் பணிக்கு மருதூர் அணைகட்டு பகுதியில் நீர் உறிஞ்சி கிணறுகள் அமைத்து அதிலிருந்து குடிநீர் பம்பிங் செய்ய உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.<br><br>மேற்கண்ட கலியாவூர் கிராமம் மருதூர் அணைகட்டு பகுதியில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஏதுவாக மோட்டார் அறை மற்றும் மின்மாற்றி அமைத்தல் ( Transfarmer) போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்படி மனை தனியர் மெசர்ஸ் ஸ்ரீபிரம்மசக்தி பில்டிங் மெட்டீரியல்ஸ் என்ற நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட அதன் நிலத்தை அதன் பங்குதாரர் திரு. கருப்பசாமி என்பவர் வல்நாடு கிராமம் மருதூர் அணைகட்டு அருகில் கலியாவூர் கிராமத்தில் அயன் சர்வே 76/2 பாக எண்ணில் 47 செண்டு அளவுள்ளமனை நிலத்தை தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர்க்கு மாநகர பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு பொது நன்மைக்காகமேற்படி இடத்தை நனகொடையாக முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு எண்.1403/2014 நாள் 10.04.2014ன் படி எழுதி கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட நன்கொடை பத்திரம் வாயிலாக வரப்பெற்ற மனை நிலம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது,<br>**அலுவலக குறிப்பு**<br>தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளருக்கு மாநகர பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு பொது நன்மைக்காக மேற்படி இடத்தை நன்கொடையாக முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு எண். 1403/2014 நாள் 10.04.2014ன் படி எழுதி கொடுத்துள்ள நன்கொடை பத்திரத்தை மாமன்றம் பதிவு செய்யயாம்.<br>இ1/22751/2008 | 66) பதிவு செய்யப்பட்டது |
| 23) | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.4203/2013/இ3 நாள் 11.06.2013இல் அனுமதிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP – 2013-2014) சிமிண்ட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் தார்சாலை அமைத்தல் போன்ற பணிகளுக்கு 3 பேக்கேஜ்களாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.<br><br>மேற்கண்ட திட்டத்தின் கீழ் விவிடி மெயின் ரோடு பகுதியில் சாலை விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளும்போது மேற்படி பகுதியின் கிழக்குப் பக்கத்தில் 7 மரங்கள் (1–.பூவரசுமரம் 6– வேப்பம் மரம்) பணிக்கு இடையூறாக இருந்து வருகிறது. மேற்கண்ட மரங்களை அப்புறப்படுத்த தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.அ2/7139/2013 | 67) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |

நாள் 07–02–2014இல் மேற்கண்ட மரங்களின் உத்தேச மதிப்புத்தொகை ரூ 3400/– என நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து வணக்கத்திற்குரிய மேயர்(பொ) அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி மரங்களை அப்புறப்படுத்த 21.02.2014இல் ஏலம்கோரப்பட்டது.

| வ.எண். | ஏலம் கேட்பவர் பெயர் மற்றும் முகவரி | முன் வைப்புத்தொகை | செல |
|---|---|---|---|
| 1 | திரு.டி. கணேசன்<br>10எச்/1 பிரையண்ட் நகர் 5வது தெரு கிழக்கு தூத்துக்குடி. | ரூ. 10000/– | 1312 |
| 2 | திரு.ஜெ.விஜயன்<br>50பி. போல்டன்புரம்3வது தெரு தூத்துக்குடி | ரூ 10000/– | 1312 |

அதில் மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு அதில் அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதல் ஏல கேள்வி ரூ 7900/– என ஏலம் கேட்ட திரு. டி. கணேசன் என்பவருக்கு ஜாரி செய்யப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மேற்கண்ட இடத்தில் உள்ள மரங்களை அப்புறப்படுத்த திரு.டி. கணேசன் என்பவரின் அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதல் ஏல கேள்வி தொகை ரூ.7900/– மாமன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் மேற்கண்ட இடத்தில் உடனடியாக சாலை பணி நடைபெறவிருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மரம் வெட்ட அனுமதி வழங்கியதை அனுமதிக்கலாம். இ3/5164/2013

24) இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட நில அளவை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வரும் திரு.எம். சக்திவேல் என்பவர் மாற்றுத் திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169(H) (C) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE 15.06.1992 Part IV Section – 2 Serial No. 30ன் படியும் திரு.எம். சக்திவேல் அவர்களுக்கு 2014–2015ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். அ15/000916/14

68) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.

25) இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தேவகி நகர் ஊர்ப்புற நூலகத்தில் நூலகராக பணிபுரிந்து வரும் திரு.ப. அந்தோணி பர்ணான்டோ என்பவர் மாற்றுத் திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொரில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி

69) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | **169**(H) (C) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE **15.06.1992** Part IV Section – **2** Serial No. 30ன் படியும் திரு.ப.அந்தோணி பர்னாண்டோ என்பவருக்கு **2014–2015**ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். அ15/005447/14 | |
| | 26) | இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள வணிகவரி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.மா. நட்டார் என்பவர் மாற்றுத் திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி **169**(H) (C) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE **15.06.1992** Part IV Section – **2** Serial No. 30ன் படியும் திரு.மா. நட்டார் என்பவருக்கு **2014–2015**ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். அ15/001187/14 | 70)<br>அலுவலகக்குறிப்பு படி<br>அனுமதிக்கப்பட்டது |
| | 27) | இம்மாநகராட்சி துப்புரவுப் பணியாளர் திரு.கணேசன்/சண்முகம் என்பவர் தனது மகளின் திருமணத்திற்கான திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/– வேண்டிவிண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் திருமணக்கடன் வழங்க அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4816/14/பி4 | 71)<br>அலுவலகக்குறிப்பு படி<br>அனுமதிக்கப்பட்டது. |
| | 28) | அரசு செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் கூடுதல் இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் ஆகியோரின் கடிதங்களின்படி இம்மாநகராட்சி பகுதிகளில் தற்பொழுது பரவி வருகின்ற டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக, பொது சுகாதார பிரிவின் மூலம் பொதுமக்களின் நலனை முன்னிட்டு அவசர அவசியம் கருதி அபேட் என்ற கொசுபுழு ஒழிப்பு மருந்து வீடுகள் தோறும் சென்று ஊற்றுவதற்கும், காய்ச்சலுக்கான காரணிகளை கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கும் தற்காலிக பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் எடுப்பதற்கும் அதன் பொருட்டு இப்பணி நடைபெறும் வரையிலான காலங்களுக்கான செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் முன் அனுமதி வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**குறிப்பு –** அனுமதிக்கலாம். ந.க.எண்.எச்4.08776/2012 | 72) அலுவலகக் குறிப்பு படி<br>அனுமதிக்கப்பட்டது |
| | 29) | இம்மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு எஸ். செந்தில்குமார் என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக மதுரை மாநகராட்சிக்கு பணி மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் | 73) அலுவலகக் குறிப்பு படி<br>அனுமதிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | விண்ணப்பத்தினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு–**அனுமதிக்கலாம். ந.க.எண்.5985/2014/சி2 | து |
| | 30) | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் வார்டு எண்கள் 12, 21, 24, 26, 40, 41 ஆகிய பகுதிகளில் குப்பைகள் அள்ளும் பணிக்கு 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் தனது தீர்மானம் எண். 36 நாள் 21.02.14 ரூ 255 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிகளுக்கு 28.03.14ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றது. பாராளுமன்ற தேர்தல் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவில்லை. தேர்தல் பணிகள் முடிந்தவிட்ட பிறகு ஆணையர் அவர்களின் 19.05.14ம் தேதிய உத்தரவுப்படி மேற்படி பணிகளுக்கு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் 21.05.14ம் தேதி அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.<br>1)அவர்லாண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் திருநெல்வேலி<br>2) மார்வெல் கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிமிடெட் சென்னை<br>இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றதாக இருந்ததால் 30.5.14ம் தேதியன்று Pricebit திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கிடைக்கபெற்றது.<br><br>இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்திருந்த அவர்லாண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் திருநெல்வேலி நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் ரூ 1450/– டன் ரேட் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை ஒரு வருட காலத்திற்கு அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மீண்டும் அவரின் பணியின் திறமையை மேற்கொண்டு மீதம் உள்ள இரண்டு ஆண்டுகளுக்கு டெண்டர் நிபந்தனை எண். 7.6.2 நிபந்தனைபடி ஒவ்வொரு வருடத்திற்கும் 10 சதவிகிதம் கூடுதலாக கொடுப்பதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** 1) முதல் 1 வருட காலம் வேலை உத்திரவு வழங்கிய நாள் முதல் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படிநீடிப்புவழங்குவதற்கு அவர்களின் பணி திறமையை கொண்டு மாமன்றம் பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.<br>எச்1 /96/14 | 74)<br>அலுவலகக்குறிப்பு 1<br>அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2<br>அங்கீகரிக்கப்பட்டது |
| | 31 | தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.4.2013ல் பணியிலிருந்து ஒய்வுபெற்ற திரு எஸ். ஜவஹர்லால் நேரு என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகைக்குரிய வட்டி மற்றும் மான்யத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழங்கப்பட வேண்டியது உள்ளது.<br>1) சிறப்பு சேமநலநிதி சந்தா தொகைக்குரிய வட்டி ரூ. 3248/–<br>2) சிறப்பு சேமநலநிதி மான்யத் தொகை ரூ. 10000/–<br>––––––––<br>13248/–<br><br>மேற்கண்ட தொகை ரூ 13248/– ஐ (ரூபாய் பதிமூன்றாயிரத்து இருநூற்றி | 75) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | நாற்பத்தி எட்டும் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**–அனுமதிக்கலாம். **சி2/4199/2013** | |
| | 32) | மாவட்ட ஆட்சித்தலைவர் தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண்.அ**2/3009/2013** நாள் **03.01.2014** மற்றும் **18.01.2014**இல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் தன்னிறைவுத் திட்டம் **2013–2014**இன் கீழ் பொது மக்கள் பங்குதொகையுடன் திட்டம் செயல்படுத்த ரூ. **30.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில் இம்மாநகராட்சி வார்டு எண்.**35** சின்னமணிநகர் பகுதியில் உள்ள மாநகராட்சி விளையாட்டு பூங்கா இடத்தில் சிம்என். ஷெட்யுல் கிளப், சின்னமணிநகர் தூத்துக்குடி என்ற நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, தூத்துக்குடி ஆகிய நிறுவனங்களின் மூலம் தன்னிறைவு திட்டம் விதிகளின்படி **33** % பங்கு தொகை பெற்று மேற்படி பூங்காவில் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைத்து அதில் மரத்தினால் ஆன தரைதளம் அமைத்தல் மற்றும் மேற்கூரையுடன் சைடு ஷீட் அமைத்தல் போன்ற பணிகள் ரூ. **23.35** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு பெற்றுள்ளன.<br><br>மேற்கண்ட பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறகு பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இரவு மற்றும் பகல் நேரங்களில் விளையாட்டு பயிற்சிகள் நடைபெறுவதால் அதற்கான மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள் அமர்த்தி அவர்களுக்கான மாத ஊதியம் ஆகியவற்றை சி.எம்.என். ஷெட்யுல் கிளப் நிறுவனத்தால் வழங்கி தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க கேட்டுள்ளார்கள்.<br><br>எனவே இம்மாநகராட்சி வார்டு எண். **35** வின்னமணி நகர் மாநகராட்சி பூங்காவில் அமையப்பெற்ற இறகு பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரலணத்தினால் சிஎம்என் ஷெட்யுல் கிளப் நிறுவனத்தின் மூலம் தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்கள் மற்றும் மின் கட்டணங்களை மேற்படி நிறுவனமே செலுத்திடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ.கு. **1.**வார்டு எண். **35** சின்னமணி நகர் மாநகராட்சி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இறகு பந்து உள்விளையாட்டு அரங்கத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதன் பொருட்டு பணியாளர்களுக்கு செலவினங்கள் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தவும் சிஎம்என். ஷெட்யுல் கிளப், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு இரண்டு வருடங்களுக்கு நிபந்தனையுடன் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**இ1.4001/2013** | **76)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | | **33)** உள்ளாட்சி அமைப்புகளின் தலைமை அலுவலகமான நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலவலகம் மூலம் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.177 நாள் **13–11–2013**இல் நகர்ப்புற நிர்வாகம் கட்டிட கூட்டுறவு சங்கம் (Urban Administration Building Society) என்ற பெயரில் நினைவு சங்கத்தின் முலமாக துணைவிதிகளை | **77)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | வெளியிட்டுள்ளது என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 30322/2012/இ3 நாள் 17-06-2014இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே உள்ளாட்சி அமைப்புகளில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு 136 உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் பங்களிப்பு தொகை ரூ 15.00 கோடி பெற்று அதிலிருந்து கட்டம் கட்டுவதற்கான செலவினங்கள் மேற்கொள்ளவும் அதில் மாநகராட்சிகளின் பங்களிப்பாக தலா ஒரு மாநகராட்சிக்கு ரூ 23.00 இலட்சம் பங்கு தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பங்கு தொகையினை மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து இரண்டு தவணைகளாக மேற்கண்ட விபரப்படி சந்தா செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நகர்ப்புற நிர்வாக கட்டிட கூட்டுறவு சங்கத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக ரூ 23.00 இலட்சம் பங்கு தொகை செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** அலுவலக கட்டிடம் கட்டுவதற்கான செலவினங்களுக்கு நகர்ப்புற நிர்வாக கட்டிட கூட்டுறவு (Urban Administration Building Society) சங்கத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக ரூ 23.00 இலட்சம் பங்கு தொகை செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/6059/2014 | |
| | 34) | இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியராக பணி பரிந்து வரும் திருமதி.பீ. செய்யது அலி பாத்திமா என்பவர் மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில்வரியிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169(H) (C)ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE 15/05/1992 Part IV Section-2 Serial No.30 ன் படியும் திருமதி. பீ. செய்யது அலி பாத்திமா அவர்களுக்கு 2014–2015ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்<br>அ15/006005/14 | 78) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 35) | இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியராக பணி பரிந்து வரும் திரு. செல்வகுமார் என்பவர் மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொழில்வரியிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169(H) (C)ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE 15/05/1992 Part IV Section-2 Serial No.30 ன் படியும் திரு.செ. செல்வகுமார் அவர்களுக்கு 2014–2015ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில் வரி | 79 அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்**<br>அ15/006004/14 | |
| | 36) | இம்மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.46 சிவந்தாகுளம் பகுதியில் உள்ள மாவட்ட கருவூலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை, சிதம்பர நகர் பகுதியில் இயங்கி வரும் அரசு கிளை நூலகத்திற்கு வாடகை இல்லா இலவச கட்டிடமாக தந்துதவுமாறும் மேலும் மேற்படி கட்டிடத்தின் மின்சார கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்தினை மேற்படி நூலக நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட நூலக அலுவலர்(கூ/பொ) தூத்துக்குடி அவர்களின் 17.06.2014ஆம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார்கள்.<br><br>ஆனால் மாமன்றம் தனது 14.11.2013ஆம் தேதிய தீர்மானம் எண்.187இல் பொதுப்பணித்துறையின் கட்டிட வாடகை நிர்ணய அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட கட்டிடத்திற்கான மாதாந்திர வாடகை ரூ 10500/–ஐ செலுத்துவதற்கு மாவட்ட நூலக அலுவலர் சம்மதிக்கும்பட்சத்தில் மேற்படி நூலக கட்டிடத்தினை அரசு கிளை நூலகத்திற்கு மாத வாடகைக்கு வழங்க தீர்மானித்துள்ளது.<br><br>இந்நிலையில் மேற்படி புதிதாக கட்டப்பட்டநூலக கட்டிடத்தினை அரசு கிளை நூலகத்திற்கு வாடகை இல்லா இலவசக் கட்டிடமாக வழங்குவதற்கும், மேற்படி கட்டிடத்தின் மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்திற்கான செலவினத்தொகையினை மேற்கண்ட அரசு கிளை நூலகமே ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி பெயரில் செலுத்துவதற்கும் மேற்கண்ட சிவந்தாகுளம் பகுதி பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ/மாணவியர்கள் வாசகர்கள் பயன்பெறும் வகையில் சிவந்தாகுளம் பகுதியில் உள்ள மாவட்ட கருவூலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை மாத வாடகையின்றி இலவசமாக வழங்குவது குறித்து மாமன்றம் மறுபரிசீலனை செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அ.கு** மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். இ1/1617/2013 | 80) பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பொருள் குறிப்பிடப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை மாத வாடகையின்றி இலவசமாக வழங்க தீர்மானிக்கப்பட்டது. |
| | 37) | தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 28.02.2014ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி. பி. காந்திமணி என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் மாதம் தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை அதற்குரிய வட்டி மற்றும் மான்யத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழங்கப்பட வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநலநிதி சந்தா பிடித்தம் செய்த தொகைக்கு வட்டி ரூ 8473/–<br>(1.3.1991 முதல் 28.02.2014 வரை)<br>2) சிறப்பு சேமநலநிதி மான்யத் தொகை ரூ. 10000/–<br>––––––––<br>18473/– | 81) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ---------- மேற்கண்ட வட்டி (ம) மான்யத் தொகை ரூ. 18,473/– ஐ (ரூபாய் பதினெட்டாயிரத்தி நானூற்றி எழுபத்தி மூன்று மட்டும்) மாநகராட்சி பொது நிதியில் இருந்து அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம் சி2/272/2014 | |
| 38) | தூத்துக்குடி ஏ.வி.எம். மருத்துவமனையில் ஆகஸ்ட் 2014 முதல் நவம்பர் 2014 மாதம் வரை மாதம் ஒரு முறை (ஞாயிற்றுக்கிழமை) வீதம் நான்கு நாட்கள் நடைபெறும் சான்றிதழ் படிப்பு Gestational Diabetis Mellitus தொடர்பான பயிற்சியில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் மரு.திருமதி. K. முத்துலெட்சுமி பெண் மருத்துவ அலுவலர் அவர்களை மேற்படி பயிற்சிக்கு அனுப்பவும் அதற்குரிய கட்டணத்தொகையாக ரூ. 5000/– வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**–அனுமதிக்கலாம். ந.க.எண்.எச்1/6317/2014 | 82)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது. |
| 39) | இம்மாநகராட்சியில் பொது சுகாதார பிரிவில் ஆடு அடிக்கும் தொட்டில் (Slaughter House) மூன்று பயன்பாட்டில் உள்ளது. அதில் பொது மக்களுக்கு சுகாதாரமான முறையில் இறைச்சிகள் கிடைக்கும் பொருட்டு அடிக்கப்படும் ஆடுகளை பரிசோதனை செய்து சான்றிதழ் அளிப்பதற்கு கால்நடை மருத்துவர்கள் மூன்று நபர்களை நடைமுறையில் உள்ள அரசு விதிப்படி மதிப்பூதியத்தின் அடிப்படையில் பணிபுரிவதற்கு தூத்துக்குடி மாவட்ட கால்நடை மருத்துவமனை மூலம் மூன்று கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்துகொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–**அனுமதிக்கலாம். ந.க.எண். எச்1/6318/14 | 83)அலுவலகக்குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது. |
| 40) | இம்மாநகராட்சியின் கீழ் இயங்கி வருகின்ற திரேஸ்புரம் நகர் நல மையத்தில் உள்ள குருஸ்புரம் மகப்பேறு மையத்திற்கு தேவையான பொருட்களை மையத்திற்கு வருகின்ற கர்ப்பிணி பெண்களின் நலன் கருதி வாங்கவும் அதற்கான செலவு தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். எச்4/4278/2014 | 84) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| 41) | தூத்துக்குடி மாநகர பொது மக்களின் நலன் கருதி இம்மாநகராட்சி பகுதிகளில் சுற்றிதிரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தால் நிகழும் போக்குவரத்து பாதிப்பு மற்றும் சுகாதார கேட்டில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு சுமார் 1000 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட், திருநெல்வேலி என்ற நிறுவனம் செய்யவும் அதற்கான செலவினத்தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**–அனுமதிக்கலாம். எச்4/11648/2010 | 85) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| 42) | ) இம்மாநகராட்சியின் கீழ் இயங்கி வருகின்ற 3 நகர் நல மையங்களில் தருவை ரோடு நகர் நல மையம் நகரின் மையப்பகுதியில் உள்ளதால் அங்கு வருகின்ற | 86) அலுவலகக் |

| | | | |
|---|---|---|---|
| | | கர்ப்பிணிப் பெண்களின் நலன் மற்றும் கருவளர்ச்சி குறித்து பரிசோதனை செய்யும் பொருட்டு ULTRA SONOGRAM என்ற கருவி ஒன்று வாங்கவும் அதற்கான செலவு தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>எச்4/4278/2014 | குறிப்பு படி அனுமதிக்கப்பட்ட து |
| | 43) | இம்மாநகராட்சியின் கீழ் இயங்கி வருகின்ற நகர் நல மையங்களில் உள்ள ஆய்வகத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் நகர் நல மையத்திற்கு வருகின்ற நோயாளிகளின் நலன் கருதி அவர்களின் இரத்தம் மற்றும் சிறு நீர் ஆகிய பரிசோதனை செய்யும் பொருட்டு தேவையான மருத்துவ உபகரணங்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். எச்4/4278/2014 | 87) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்ப்ட்ட து. |
| | 44) | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாளச் சாக்கடை திட்டப் பணியில் சத்திரம் தெரு பகுதியில் பிராதான சாக்கடைக குழாய் பதிப்பதற்கு இடையூறாக உள்ள குடிநீர் குழாயை மாற்றுப் பாதையில் மாற்றியமைக்க குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 1,61,024/– செலவு செய்ததது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 11/14–15 | 88) பதிவு செய்யப்பட்டது |
| | 45) | மனுதாரர் M/S Sesa Sterlite தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் சிப்காட் மனைப்பிரிவு மவ/ந.ஊ.இ. எண்.245/01ல் மனை எண் பி1 பகுதி முதல் பி33 பகுதி முடிய உள்ள இடத்தில் அனல் மின் நிலையத்திற்கு 21385 H.P. (குதிரை திறன்) மின் மோட்டார் இயந்திர நிறுவன அனுமதி வழங்க கோரியுள்ளார்.<br>மேற்படி இடத்தில் Sterlite மின் உற்பத்தி ஆலை பலமாடி நிறுவன கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2730/2012/சி.பி. நாள் 26.06.2013 மற்றும் உறுப்பினர்=/செயலர் தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 266/11 தூ.உ.தி.கு. நாள் 10.12.2013 திட்ட அனுமதி எண். 21 A முதல் V/2013 முடிய வரைபடத்தில் மின்மோட்டார் 21385 H.P. மின்மோட்டார் இயந்திரம் நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. தொழில் சாலை ஆய்வாளரிடம் உரிமம் தீயணைப்புத்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம் தடையில்லாச்சான்று மற்றும் உள்ளூர் பட்டதாரி பொறியாளரிடம் உறுதிச்சான்று (Stability Certificate) பெறப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு ஆணையாளர் சென்னை அவர்களால் Sterlite மின் உற்பத்தி ஆலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும் மாநகராட்சி நல அலுவலரின் 24.06.2014ம் தேதிய பரிந்துரை அறிக்கையில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தீயணைப்புத்துறையினரிடம் அவ்வப்போது உரிய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 21385 H.P மின் மோட்டார் இயந்திரம் நிறுவுவதற்கு அனுமதி வழங்கலாம். | 89) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்ட து |

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு . மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/4066/2014</td><td></td></tr>
<tr><td></td><td>46) தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான அத்திமரப்பட்டி வார்டு எண். 56ல் உள்ள தென்னை மற்றும் பனை மரங்கள் மகசூல் அனுபவிக்கும் உரிமம் 2014–2017 மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழங்க தூத்துக்குடி மாமன்றத்தில் 21.02.2014ம் தேதிய 30ம் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டவாறு 25.06.2014 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><td>வ.எண். ஏல இனம்</td><td>பெயர் (ம) முகவரி</td><td>நிர்ணயம் செய்யப் பட்ட குறைந்தபட்ச தொகை</td><td>கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை</td></tr>
<tr><td>1) அத்திமரப்பட்டி வார்டு எண்.56 உள்ள தென்னை மற்றும் பனை மரங்கள் மகசூல் அனுபவிக்கும் உரிமம்</td><td>1)ஆ,ஜெயஜோதி<br>த/பெ.ஆறுமுகநாடார்<br>1/57 அத்திமரப்பட்டி<br>2)பி. பொன்சிங்<br>த/பெ.பாக்கியராஜ்<br>1/59 அத்திமரப்பட்டி</td><td><br><br><br>10000/–</td><td>11000/–<br><br><br>10500/–</td></tr>
</table>
மேற்கண்ட இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி. ஆ. ஜெயஜோதி என்பவருக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2014–2015 உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் 2016–2017 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு–மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.020353/2012/அ16</td><td>90) அலுவலகக்குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>47) தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான சிவன்கோவில் தெரு மாநகராட்சி திருமண மண்டபத்தை 2014–2017 மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழங்க தூத்துக்குடி மாமன்றத்தில் 21.02.2014ம் தேதிய 33ம் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டவாறு 25.06.2014 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.</td><td>91) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| வ.எண். | ஏல இனம் | பெயர் (ம) முகவரி | நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தொகை | கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை (ஓராண்டுக்கு) |
|---|---|---|---|---|
| 1 | சிவன்கோவில்தெரு மாநகராட்சி திருமண மண்டபம் வாடகை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | (1)சி.சுரேஸ்<br>த/பெ.இ.செல்லையா<br>15எ.லெவிஞ்சிபுரம் 02 | 200000/– | 505000 |
| | | 2)எம்.வேலம்மாள்<br>க/பெ.ஜி.முத்தையா<br>மில்லர்புரம் கிழக்கு | | 456900 |
| | | 3)ஆர்.வெள்ளைசாமி<br>த/பெ.எஸ்.ராமஜெயம்<br>5 மாசிலாமணிபுரம் | | 170000 |
| | | 4)பொ. பால்ராஜ்<br>த/பெ.பொன்னுசாமி<br>84 மேலசண்முகபுரம் | | 900000 |

மேற்கண்ட இனத்திற்குவழங்கக் கோரி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.பொ. பால்ராஜ் என்பவருக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2014–2017 (2014 ஆகஸ்ட் முதல் 2017 ஜூலை வரை) மூன்றாண்டு தொகுப்பில் உரிமம் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.000556/2014/அ16

48) இம்மாநகராட்சியின் 2014–15ம் ஆண்டின் உத்தேச வரவு மற்றும் செலவு மதிப்பீடுகள் மற்றும் 2013–2014ம் வருடத்திய திருத்திய வரவு மற்றும் செலவு மதிப்பீடுகள் கீழ்க்காணும் நிதிகளுக்கு (1) வருவாய் (ம) மூலதன நிதி (2) குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் (3) கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**–மாமன்றம்அனுமதிக்கலாம். பி1/1991/2014

92 ) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்–பட்டது

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : .06.2014

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி